1994 மார்ச் 22]

நோக்கமே, குடியிருப்பவர்கள், வீட்டுச் சொந்தக்காரர், இருவருமே உரிமையியல் நீதிமன்றங்களை நாடி., தங்களுக்கு உரிய பரிகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்குத்தானே தவிர, அவர்கள் கிரிமினல் போர்சை உபயோகப்படுத்தவேண்டும் என்பதற்காக அல்ல. மதுரை மாநகரத்திலே இதுபோன்று ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற பெருவாரியான நகராட்சிப் பகுதிகளிலே எந்தெந்த இடங்களிலே இந்தச் சட்டத்தினுடைய எல்லை அமுலாக்கப்படுகிறதோ, அந்தப் பகுதிகளிலே இருக்கிற மாவட்ட முன்சீப் கோர்ட், அந்த மாவட்ட உரிமையியல் நடுவராக இருக்கக்கூடிய நீதிபதி அந்த வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து தனியாக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கக்கூடிய பரிசீலனை சென்னை மாநகரத்தைத் தவிர, வேறு எந்த இடத்திலும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 69, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

69—

நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்க திட்டம்

***2185*—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் படிப்பு அறிவைப் பொறுத்த வரையிலே, இன்று தமிழகத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அதைப்போல, பெண்கள் படிப்பு அறிவில் இன்று, தமிழகத்தில் முதல் இடத்திலே வகிக்கிறது. ஆனால் படித்து வேலையில்லாத பட்டதாரிகள் என்ற அளவிலே அதிகம் பேர்கள் உள்ளனர். தொழிற்துறையில் மிகவும் பின்தங்கியுள்ள குமரி மாவட்டம் முன்னேறவேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 400 கோடி என்ற அளவில் ஒரு ரப்பர் தொழிற்சாலைக்கு அனுமதி அளித்திருந்தார்கள். அதேபோல் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்காக குமரி மாவட்ட

மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். அதேபோல் இங்கு தொழிற்துறையில் பின்தங்கியிருக்கும் படித்து வேலையில்லாமல் இருக்கும் அந்தப் பட்டதாரிகளுக்கு ஒரு வேலைவாய்ப்பு கிடைக்கும் முகத்தாண் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை கூட்டுறவுத் துறையில் அமைப்பதற்கு குறைந்த அளவில் 25 தகுதியுள்ள தொழில்முனைவர்களாவது உரிய திட்டத்துடன் முன்வந்தால், அதனை நிறுவுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 70, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

வேதாரண்யத்தில் பழம் பதப்படுத்தும் மையம் அமைத்தல்

22766—திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

800 ஹெக்டேர் மா, 330 ஹெக்டேர் முந்திரி மற்றும் பழவகைகள் அதிகளவு விளையும் வேதாரண்யம் பகுதியில் பழம் பதப்படுத்தும் மையம் (ஊட்டியில் உள்ளது போல்) அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் பழப்பதனிடும் மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 'புட் ப்ராசசிங்கில்' தமிழகம் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது .ஆண்டு ஒன்றுக்கு சுமார் 500 கோடி ரூபாய் பெருமானமுள்ள வேளாண்மைப் பொருட்கள், குறிப்பாக அழுகுகின்ற காய்கறிகள், பழவகைகள் அழுகி வீணாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.. குறிப்பாக இந்த 'புட் ப்ராசசிங்கைப்' பொறுத்தவரையில் மைசூரில் இருக்கிற CFTRI (Central Food Technological Research Institute) மிகப் பெரிய அளவில் புதிய கண்டுபிடிப்புகளை எல்லாம் இயற்றிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக மிக அதிகமாக தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று, அல்லது செல்ல முடியாமல் இடையிலே அழிந்து போகின்ற தக்காளி, மாங்காய் போன்ற இனங்களை எல்லாம் அதிலிருந்து ஜூஸ் போன்றவற்றை எல்லாம்